**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

SC.No.119/2020

நாள்.19.09.2025

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 19.09.2025ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :அ.சா.1 | ஜாதி | :----------- |
| பெயர் | எட்டியகவுண்டர் | தொழில் | : |
| த/பெ. | : | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**(A1 to A4 present)**

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது டேனீஸ்பேட்டை காஞ்சேரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 01.06.2019ம் தேதியன்று மாலை சுமார் 7.30 மணியளவில் என் மகள் வீட்டு காட்டுப்பிரச்சனையை பேசுவதற்காக என் மகள் வீட்டிற்கு சென்றேன். அங்கு ஆஜர் எதிரிகள் கோவிந்தன், பழனி, வெங்கடேஷ், மணி ஆகிய நான்கு பேரும் தேவடியா பையா இங்கு எதுக்குடா வருகிறாய் என்று தகாத வார்த்தையால் பேசினார்கள்.

2. கோவிந்தன் கீழே கிடந்த கல்லை எடுத்து எனது வலது கையில் அடித்துவிட்டார். மணி என்பவர் கல்லால் எனது இடது முழங்காலில் அடித்தார். தடுக்க வந்த என் மருமகன் வெங்கடேசனை கோவிந்தன்

கல்லால் வலது கையிலும், காலிலும் அடித்தார். என் மகள் கோமதியை மணி என்பவர் கல்லால் இடது கண்ணுக்கு மேல்புறமாக அடித்தார். எங்களால் எதுவும் முடியவில்லை. நாங்கள் சத்தம்போட எல்லோரும் வந்துவிட்டார்கள். இன்னைக்கு தப்பித்துவிட்டீர்கள் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று கோவிந்தன், மணி, பழனி, வெங்கடேசன் ஆகியோர்கள் கல்லை காண்பித்து சொன்னார்கள்.

3. பின்னர் மேற்படி நான்கு பேரும் என் மகளின் டிராக்டரின் மீது கல்லை வீசி Head light. Pannet, ஆகியவைகளை உடைத்துவிட்டார்கள். பின்னர் தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதித்தார்கள். சிகிச்சையில் இருந்தபோது போலீசார் வந்து விசாரித்தார்கள். என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ.1**ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் இந்த வழக்கு சம்பந்தமான விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளித்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/—த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.

**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

SC.No.119/2020

நாள்.19.09.2025

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 19.09.2025ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :அ.சா.2 | ஜாதி | :———————— |
| பெயர் | வெங்கடேசன் | தொழில் | : |
| த/பெ. | : | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**(A1 to A4 present)**

**முதல் விசாரணை:—**

1. நான் தற்போது டேனீஸ்பேட்டை ராமய்யர் ஊரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 01.06.2019ம் தேதியன்று மாலை சுமார் 7.30 மணியளவில் என் மாமனார் என் வீட்டிற்கு வழிதட பிரச்சனைக்காக பஞ்சாயத்து பேசுவதற்காக தடத்தின் வழியாக வந்தார். அப்போது அங்கிருந்த மாரப்பன் மகனான ஆஜர் எதிரி கோவிந்தன், பழனிசாமி, மற்றும் கோவிந்தன் மகன்களான ஆஜர் எதிரிகள் மணி, வெங்கேடஷ் ஆகியோர்கள் என் மாமனாரை பார்த்து தேவடியா பையா என்று தகாத வார்த்தையால் பேசினார்கள்.

2. பின்னர் பேசிக்கொண்டே கோவிந்தன் கல்லை எடுத்து என் மாமனாரின் வலது கையில் அடித்துவிட்டார். மணி கல்லால் எனது மாமனாரின் இடது

காலில் அடித்தார். இரண்டு பேரும் என் மாமனாரை அடித்ததால் நான் தடுக்கபோனேன். என்னை வலது காலிலும், வலது கையிலும் கல்லால் கோவிந்தனும், பழனிசாமியும், மணியும், வெங்கடேசனும் அடித்தார்கள்.

3. பின்னர் என் மனைவி கோமதியை கல்லால் கோவிந்தன் தலையில் அடித்தார். நாங்கள் கத்தியதால் கூட்டம் சேர்ந்து கொண்டது. பின்னர் ஆஜர் எதிரிகள் நான்கு பேரும் கல்லை காட்டி இன்றைக்கு தப்பித்துவிட்டீர்கள் என்னைக்கு இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள். பின்னர் கோவிந்தன் அங்கு நின்றிருந்த TN 30 S 9905 என்ற பதிவெண் கொண்ட எனது டிராக்டரின் மீது கல்லை வீசினார்.

4. அதனால் கல்பட்டு டிராக்டரின் முன்பகுதி, head light சேதமடைந்துவிட்டது. பின்னர் எதிரிகள் ஓடிவிட்டார்கள். என் மாமியார் மணி தனியார் ஆம்புலன்ஸை வரவழைத்து சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். பின்னர் மறுநாள் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் விசாரித்தார்கள். நான் நடந்த உண்மையை சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போதிய வாய்ப்பளித்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/–த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.

**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**
SC.No.119/2020

நாள்.19.09.2025

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 19.09.2025ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :அ.சா.3 | ஜாதி | :———————— |
| பெயர் | கோமதி | தொழில் | : |
| த/பெ. | : | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**<u>(A1 to A4 present)</u>**

**<u>முதல் விசாரணை:–</u>**

1. நான் தற்போது டேனீஸ்பேட்டை, காஞ்சேரி ராமய்யர்காட்டில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது தகப்பனார். அ.சா.2 எனது கணவர். ஆஜர் எதிரிகளுக்கும், எங்களுக்கும் தடபிரச்சனை இருந்தது. கடந்த 01.06.2019ம் தேதியன்று மாலை சுமார் 7.30 மணியளவில் என் அப்பா பஞ்சாயத்து பேசுவதற்காக எங்கள் வீட்டிற்கு வந்தார். என் அப்பா தடத்தின் வழியாக வந்தபோது ஆஜர் எதிரிகள் நான்கு பேரும் என் அப்பாவை பார்த்து தேவடியா பையா, கண்டார ஓழி பையா இங்கு எதற்குடா வந்தாய் என்று தகாத வார்த்தையால் பேசினார்கள்.

2. அப்போது கோவிந்தனும், வெங்கடேசனும் என் அப்பாவை கல்லால் வலது கையில் அடித்தார்கள். மணி கல்லால் என் அப்பாவின் இடது காலில்

அடித்தார். மேலும் வெங்கடேசன் என்பவர் என் அப்பாவின் முதுகில் குத்தினார். என் கணவர் தடுக்க சென்றபோது வெங்கடேசனும், கோவிந்தனும் கல்லால் எனது கணவரின் வலது கையிலும், வலது காலிலும் அடித்தார்கள். நான் தடுக்க சென்றபோது எதிரி மணி என்னை கல்லால் இடது கண்ணில் அடித்தார். நாங்கள் வலி தாங்க முடியாமல் கத்தினோம். நான்கு பேரும் கல்லை எடுத்து என்னைக்கு இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு, கையில் இருந்த கல்லால் அங்கிருந்த எங்களது டிராக்டரின் மீது அடித்தார்கள். டிராக்டரின் கண்ணாடி, பெனட் மற்றும் பல பாகங்கள் உடைந்து விட்டது அதன் மதிப்பு சுமார் 3,000/− இருக்கும்.

3. பிறகு என் அம்மா மணி தனியார் ஆம்புலன்ஸ் வரவழைத்து எங்களை சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்று அனுமதித்தார். மறுநாள் போலீசார் வந்து விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. போதிய வாய்ப்பளித்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/−த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.

**சார்பு நீதிமன்றம், ஓமலூர்**

SC.No.119/2020

நாள்.19.09.2025

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 19.09.2025ம் நாளாகிய இன்று திருமதி.சித்ரா, கண்காணிப்பாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | :அ.சா.4 | ஜாதி | :----------- |
| பெயர் | ரவி | தொழில் | : |
| த/பெ. | : | மதம் | : |
| கிராமம் | : | வயது | : |
| வட்டம் | : | | |

**(A1 to A4 present)**

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது டேனீஸ்பேட்டையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1, 2, 3 ஆகியோரை தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். 02.06.2019ம் தேதி மதியம் 12 மணிக்கு டேனீஸ்பேட்டையில் இருந்து காஞ்சேரி செல்லும் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தேன்.

2. அப்போது 01.06.2019ம் தேதியன்று இரவு 7.30மணிக்கு எதிரிகளுக்கும், அசா.1, 2, 3க்கும் நடந்த பிரச்சனை சம்பந்தமாக இடத்தை பார்வையிடுவதற்காக ஒரு போலீஸ் மேடம் வந்து அந்த இடத்தை பார்த்து படம் வரைந்தார்கள். மகஜர் தயார் செய்தார்கள் அதற்கு சாட்சியாக

அங்கிருந்த முத்துசாமியிடமும், என்னிடமும் கையொப்பம் கேட்டார்கள் நாங்கள் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து கொடுத்தேன். அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளித்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி சொன்ன சங்கதிகள் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன் கையொப்பம் இடப்பட்டது.

(ஒப்பம்/-த.மாலதி),
உதவி அமர்வு நீதிபதி,
ஓமலூர்.